

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (12.12..2024) கோவை மாவட்டம், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்தனர். உடன் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் பொள்ளாச்சி வி.ஜெயராமன், கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி ஆகியோர் உள்ளனர்.






தென்கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணிச் செயலாளர் – தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள சென்றிருக்கும் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி 11.12.2024 அன்று இந்தோனேசியாவிற்குச் சென்று கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளினை இந்தோனேசியா தமிழர்கள் மத்தியில் கேக் வெட்டி கொண்டாடினார். அப்போது கார்த்திகேயன், கலையரசன், மணிகண்டன், அரவிந்த், சிவா, சுரேஷ், நாகா, வி.பி.திராவிடமணி ஆகியோர் உடனிருந்தனர். அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் (12.12.2024) மலேசியாவில், மலேசியா தி.மு.க. அயலக அணியின் சார்பில், மலேசியா அயலக அணி பொறுப்பாளர் முகம்மது பிர்தௌஸ் கான், துணை பொறுப்பாளர் முஹம்மது ஜெயிலானி, தொழிலதிபர் E&Y சாகுல் ஹமீது மற்றும் அயலக அணி நிர்வாகிகள் சார்லஸ், ஹமீது, ஜெய்துத்தீன், முகம்மது ஷபீக் ஆகியோர் முன்னிலையில், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளினை மலேசியா கழகத் தோழர்கள் மத்தியில் கேக் வெட்டி கொண்டாடினார். இந்நிகழ்ச்சியில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சையத்ஹபீஸ், நாகை ஏ.கே.எஸ்.முருகன் மற்றும் அயலக கழக உடன்பிறப்புக்கள் ஏ.கே.பி.ஆரிப், சிவா, அறந்தாங்கி ராஜா முகமது ஆகியோர் உடனிருந்தனர்.

### மலேசியாவில் நடந்த ஆசிய பசிபிக் போட்டியில் 24 பதக்கங்களை வென்ற

# தமிழ்நாட்டு வீரர் - வீராங்கனைகளுக்குப் பாராட்டு!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!






**சென்னை, டிச.14–**

**மலேசியாவில் நடந்த 10–வது ஆசிய பசிபிக் மாற்றுத்திறனாளிகள் போட்டியில் இந்தியா வென்ற மொத்தம் 55 பதக்கங்களில் 24 பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகளுக்குப் பாராட்டு தெரிவித்து, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

அது வருமாறு:–

மலேசியாவில் நடைபெற்ற 10th Asia Pacific Deaf Games 2024-ல் தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனையர் வெவ்வேறு விளையாட்டுக்களில் 6 தங்கம், 13 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தம் 24 பதக்கங்களைக் குவித்து சாதனை படைத்துள்ளனர். இப்போட்டியில், இந்தியா ஒட்டுமொத்தமாக 55 பதக்கங்களை வென்றுள்ள நிலையில், அதில் 24 பதக்கங்களை தமிழ்நாட்டு வீரர், வீராங்கனையர் குவித்திருப்பதில் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைந்தேன். பதக்கங்களை வென்ற தம்பிகள் மணிகண்டன், ராக்கப்பன், வினித், சாந்தனு, கார்த்திக், முகம்மது யாசின், சுதன் மற்றும் தங்கைகள் பிரியங்கா, சுபஸ்ரீ, சமீஹா பர்வீன், ஹரினி, ஜெர்லின் அனிகா ஆகியோருக்கு வாழ்த்துகள்.

இப்போட்டியில் பங்கேற்க உதவிடும் வகையில், நம் வீரர்களின் பயணம் உள்ளிட்ட செலவினங்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமும், – ‘எலைட்’ திட்டத்தின் வழியாக தங்கை ஜெர்லின் அனிகாவுக்கும் நிதியுதவி அளித்திருந்தேன். தற்போது பதக்கங்களோடு திரும்பியுள்ள நம் வீரர் – வீராங்கனையரின் திறமையைப் பாராட்டுகிறோம். நம் மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு என்றென்றும் துணை நிற்போம், அவர்களின் வெற்றிப்பயணம் தொடரட்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தென்பெண்ணை ஆற்றிலிருந்து வெளியேறும்

# உபரி நீர் காக்கங்கரை ஏரிகளில் நிரப்பப்படுமா?

### பேரவையில் - பர்கூர் தே.மதியழகன் கேள்வி!

*சென்னை, டிச. 14 -*

*தென்பெண்ணை ஆற்றிலிருந்து மழைக்காலங்களில் வெளியேறும் உபரி நீர் காக்கங்கரை உள்ளிட்ட ஏரிகளில் நிரப்பப்படுமா என்று பேரவையில் உறுப்பினர் தே.மதியழகன் கேள்வி தொடுத்தார்.*

*இது குறித்த விவாதம் வருமாறு:*

**தே.மதியழகன்:** *தென்பெண்ணை ஆற்றிலிருந்து மழைக்காலங்களில் வெளியேறும் உபரிநீரை படேதளா ஏரியிலிருந்து கப்பல்வாடி வழியாக காக்கங்கரை வரையுள்ள ஏரிகளில் நிரப்புவதற்கு ஏதாவது ஆயத்தம் செய்யப்படுமா?*



**அமைச்சர் துரைமுருகன்:** *தென்பெண்ணை ஆற்றிலிருந்து வெளியேறும் நீரை மார்க்கண்டேயா நதியிலிருந்து 17 கிலோ மீட்டர் வரை கொண்டு வந்து படேதளா ஏரிக்கும் அதைச் சுற்றியுள்ள ஏரிகளுக்கும் இப்போது தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அது போதாது என்று அங்கிருந்து வேறு சில பகுதிகளுக்கும் மேலும் 20 ஏரிகளிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. படேதளா ஏரிக்கு போதுமான தண்ணீர் இல்லை. எனவேதான், எண்ணேக்கோல் என்கிற இடத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து படேதளா ஏரிக்கும், அங்கேயுள்ள 12 குளங்களுக்கும் தண்ணீர் கொண்டுவர புது கால்வாய் வெட்டுகின்ற நடவடிக்கையை அரசு மேற்கொண்டு வருகிறது. அது நிறைவேற்றப்பட்ட பிறகு படேதளா ஏரிக்கு நீர் கொண்டு வந்து, காக்கங்கரை, கப்பல்வாடி வழியாக கொண்டு வந்து புத்தூர் அணையோடு சேர்த்துவிடலாம்.*

*இவ்வாறு விவாதம் நடைபெற்றது.*

### ஒன்றியச் செயலாளர் நா.கவியரசு நிகழ்ச்சி ஏற்பாட்டில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

# நீடாமங்கலம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகக் கொடியேற்றி நலஉதவிகள் - அன்னதானம்!

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. - நிவேதா ஜெசிகா பங்கேற்பு!

திருவாரூர், டிச. 14

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி, கழகக் கொடியேற்றியும், அன்னதானம் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் தொழில் முதலீடு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில், மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் நிவேதா ஜெசிகா ஆகியோர் பங்கேற்று விழாவை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கின்றனர். நீடாமங்கலம் தெற்கு ஒன்றியச் செயலாளர் நா.கவியரசு நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாட்டினை செய்கிறார்.

இவ்விழாவில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, கழக சட்டத் திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா. இளையராஜா, மன்னார்குடி நகர்மன்றத் தலைவர் மன்னை த.சோழராஜன், மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ராஜா சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கீழ்க்கண்ட நாட்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:–

நாளை (15.12.2024 – ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணிக்கு, வடுவூர் உள்விளையாட்டு அரங்கில் பள்ளி மாணவர்களுக்கான கபடிப் போட்டிகளும், (16.12.2024 – திங்கள் கிழமை) காலை 12.00 மணிக்கு, எடமேலையூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மாணவ மாணவியருக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதலும்,

(17.12.2024 செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு, வடுவூர் வடபாதியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவ மாணவியருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதலும்,

காலை 11.00 மணிக்கு, மூவர் கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவ மாணவியருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதலும், மதியம் 12.30 மணிக்கு, சீனிக்குடிகாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவ மாணவியருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதலும்.

(18.12.2024 புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு, வடுவூர் அக்ரஹாரம் குழந்தைகள் மையத்தில் குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வும், காலை 12.00 மணிக்கு, வடுவூர் அக்ரஹாரம் கோதண்டராமர் திருக்கோவிலில் அன்னதானம் வழங்கும் நிகழ்வும், (19.12.2024 வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு, எடமேலையூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மரக்கன்றுகள் நாடும் விழாவும், காலை 12.00 மணிக்கு, தஞ்சை மன்னை சாலையில் மரக்கன்றுகள் நடுதலும், (20.12.2024 வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு, எடஅன்னவாசல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவ மாணவியருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகிறது.

நிகழ்ச்சிகளை ஒன்றிய கழகத்துடன் இணைந்து மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சா.பகலவன், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் எம்.இளவழகன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் எஸ்.மலர்மன்னன், விளையாட்டு மேம்பாட்டு அணி ஒன்றிய அமைப்பாளர் சி.கோ.செல்வகுமார், எஸ்.விஜயராகவன், கே.செந்தமிழ் செல்வன், பொன். இலக்கியசெல்வன், ஜே.விக்ரமாதித்யன், கே.வீரராஜ், ஒன்றிய பொறியாளர் அணி பொறுப்பாளர் வி.ராஜகுரு, ஒன்றிய வர்த்தகர் அணி அமைப்பாளர் ஆர்.வீரமணி, ஒன்றிய சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வி.கோவிந்தராசு, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் தே.கமல்ஹாசன், மற்றும் மருது (எ) தரு.கிருஷ்ணராஜா ஆகியோர் ஒருங்கிணைக்கின்றனர்.

நடைபெற இருக்கும் அனைத்து நிகழ்வுகளிலும் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட ஒன்றிய சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ள ஒன்றிய செயலாளர் நா.கவியரசு கேட்டுக்கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை மு. இயலரசன்

**டிசம்பர் 14 (1992)**



**இளமைப் பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய பின்னர் கழகக் கொள்கைகளை பட்டிதொட்டியெங்கும் பரப்பியவர்.**

**ஆசிரியராகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பணிக்காக தனது பணியினைத் துறந்தவர்.**

**‘தன்மானம்’ என்ற வார இதழ் நடத்தியவர்.**


**“ஈட்டி முனைபோல் கழகத்தின் கொள்கைகளை மேடைகளில் எடுத்தெறிந்து வீசுபவர்” என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மோகனூர் ப.சின்னு

**டிசம்பர் 14 (1995)**



**திராவிட இயக்கத்தில் பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கியவுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**வட்டப் பிரதிநிதி, துணைச் செயலாளர், கிளைச் செயலாளர், ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து, மோகனூர் பகுதியில் கழகம் வளரப் பாடுபட்டவர்**

**சேலம் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவராகவும் – மோகனூர் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த கறுப்புக் கொடி, இலங்கைத் தமிழர், கைலாசம் கமிஷன் எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, இந்தி எதிர்ப்பு போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**